பொருள் எண்.1

சாத்தூர் நகராட்சியில் பொறியியல் பிரிவு பொலிரோ ஜீப் வாகனம் TN 67 BA 5926-க்கு காலமுறை பராமரிப்பு பணிகளான கீழ்க்கண்ட பணிகளை மகேந்திரா & மகேந்திரா டீலர் P.P.S மோட்டார் பிரைவேட் லிமிடெட் விருதுநகர் நிறுவனத்தில் பழுதுகள் பார்ப்பதற்கவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்.
2. ஆயில் சர்வீஸ் செய்து ஆயில் பில்டர் டீசல் பில்டர்கள் புதியது மாற்ற வேண்டும்
3. சைலன்ஸ்சர் புஸ்கள் மாற்ற வேண்டும் .
4. 4 வீல் பேரிங் செக்கப் செய்து கீரிஸ் பேக்கிங் செய்ய வேண்டும்.
5. வைபர்பிளேடு புதியது மாற்ற வேண்டும்.
6. கிலோ மீட்டர் 220000-க்கான சர்வீஸ் செய்ய வேண்டும்.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 429/2024/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.474, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 2

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பழைய மன்ற கூட்ட அரங்கும் சேதமடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ள 09.08.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சுந்நராமகாலிங்கம் | - | மதிப்பீட்டை விட 0.03 சதவீதம் குறைவு |
| 2. | பி.சுப்பாராஜ் | - | மதிப்பீட்டை விட 0.06 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.1,20,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.376 நாள்:30.11.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள சுந்நராமகலிங்கம் ஒப்பந்தக்காரரின்

ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 807 /2023/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.475, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 3</u>

சாத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள UPS பயன்பாட்டில் உள்ள 12 கே.வி.பேட்டரி வாங்கப்பட்டு சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. தற்போது முற்றிலும் செயல் இழந்து விட்டதால் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருகிறது. . எனவே, புதியதாக 12 கே.வி. பேட்டரி சப்ளை செய்ய தகுதியான நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் 22.08.2024 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| S. No | Description | Name of the Company Rathan Computers Rate (Rs) | Name of the Company Star Sytems Services Rate (Rs) | Name of the Company Genius Rate (Rs) |
|---|---|---|---|---|
| 1 | Exide 150 ah Btteries | 19400 | 19200 | 19300 |
| 2 | 25 sq mm connector with cabele 10mtr | 4500 | 4400 | 4800 |

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணியினை ரூ.2,00,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.435 நாள்: 25.06.2024-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளிகள் அளித்துள்ள Star Sytems Services நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 271 /2024/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.476, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

சாத்தூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிக்குரிய பிரிண்டர்களுக்கு தேவையான டோணர்கள் சப்ளை செய்ய தகுதியான நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் 22.08.2024 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட விலைப்புள்ளிகளுடகது ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| S. No | Description | Name of the Company Rathan Computers Rate (Rs) | Name of the Company Star Sytems Services Rate (Rs) | Name of the Company Genius Rate (Rs) |
|---|---|---|---|---|
| 1 | 88A Tonner Cartridge | 1775 | 1500 | 1600 |
| 2 | 337 Tonner Cartridge | 1870 | 1600 | 1700 |
| 3 | 12 A Tonner Cartridge | 1550 | 1350 | 1450 |
| 4 | 335X Tonner Cartridge | 5775 | 5400 | 5600 |
| 5 | NPG59 Tonner Cartridge | 4495 | 4200 | 4400 |

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.1,00,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.423 நாள்: 25.06.2024-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளிகள் அளித்துள்ள Star Sytems Services நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 270 /2024/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.477, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவுக்கு புதிய கலர் பிரிண்டர் சப்ளை செய்ய தகுதியான நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் 22.08.2024 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| S.No | Description | Name of the Company Rathan Computers Rate (Rs) | Name of the Company Star Sytems Services Rate (Rs) | Name of the Company Genius Rate (Rs) |
|---|---|---|---|---|
| 1 | Hp 178nw Wireless Laser Color Mobile Ethernet Wi Fi 4ZB96A | 54800 | 54550 | 55000 |

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.55,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.424 நாள்: 25.06.2024-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளிகள் அளித்துள்ள Star Sytems Services நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 271/2024/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.478, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 6

இந்நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி உரக்கிடங்கு எம்.சி.சி. Compost yard—ல் உள்ள அரவை இயந்திரம் (Shredding Machine) மற்றும் கன்வேயர் பெல்ட் (Converyor Belt) முழுமையாக பழுதடைந்துள்ளதால் அதனை பழுது பாக்கும் பணியினை மேற்கொள்ள 21.08.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. Ramu Enterprises - மதிப்பீட்டை விட 0.36 சதவீதம் குறைவு
2. Kathir Enterprises - மதிப்பீட்டை விட 0.18 சதவீதம் குறைவு

அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட பணியினை ரூ.6,50,000-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.440 நாள்:25.06.2024-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள சுந்நராமகலிங்கம் Ramu Enterprises நிற்வனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 141 /2024/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.479, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 7

சாத்தூர் நகராட்சியில் நகர் மன்ற தலைவர் வாகனம் TN 67 BP 1246 வண்டி 30000 கி.மீ பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான காலமுறை பராமரிப்பு பணிகளான கீழ்க்கண்ட பணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற மகேந்திரா & மகேந்திரா டீலர் மதுரை கப்பலூர் (Automotive manufactures Pvt Ltd.) நிறுவனத்திடம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவு தொகைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 463/2024/ எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.480, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 8

மாவட்ட ஆட்சியர்/மாவட்ட தேர்தல் அலுவலர், விருதுநகர் அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆர்2-1/4/2023, நாள்:23.07.2024 மற்றும் 01.08.2024-ன்படி விருதுநகர் மாவட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் 2008 மற்றும் 2009 ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டு 15 வருடங்கள் முடிவடைந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை (நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்களை தவிர்த்து) அழிப்பதற்கு (Destruction) Bell நிறுவனம், பெங்களூரில் ஒப்படைக்கும் பொருட்டு பொது தேர்தல்கள் பிரிவிற்கு ஒப்படைப்பதற்காக Mobile App'-ல் ஸ்கேன் செய்யும் பணிகள் விருதுநகர் நகராட்சி அலுவலகத்திற்கு பின்புறம் நாராயண மடம் தெருவிலுள்ள சமுதாயக் கூடத்தில் 05.08.2024 முதல் 09.08.2024 வரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, சாத்தூர் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் உள்ளடக்கிய டிரங்க் பாக்ஸ்களை (Trunk Box) ஏற்றி இறக்குவதற்கு சுமை தூக்கும் பணியாளர்களுக்கான கூலி வழங்கும் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான

செலவினத் தொகை ரூ.20,000/-க்கும் மேற்படி செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து பயன்படுத்திக் கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவு செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1387/2017/அ1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.481, நாள்: 03.09.2024
தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 9

இந்நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால், அலுவலகத்திற்கு வரப்பெறும் கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல் கடிதங்களுக்கு உடனுக்குடன் கணினி வாயிலாக பதில்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து உடனுக்குடன் அனுப்புவதற்கும், நிர்வாக நலன்கருதியும், இந்நகராட்சியில் தற்காலிக பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.எஸ்.பரமேஸ்வரி என்பவருக்கு விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். A7/P.R.345/135/2024, நாள்:17.08.2024ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள 2024-2025ம் ஆண்டிற்கான ஊதிய விகித அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கவும், மேற்படி செயல்முறை ஆணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.862/2017/அ1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.482, நாள்: 03.09.2024
தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 10

இந்நகராட்சியின் 2023-2024ம் ஆண்டுக்குரிய நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.356/2010/சி1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.483, நாள்: 03.09.2024
தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.11

இணை இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் 02.08.2024ம் தேதிய காணொளி ஆய்வுக்கூட்டம், திருநெல்வேலி நகராட்சி நிவாக மண்டல இயக்குநர் அவர்களின் 03.08.2024ம் தேதிய காணொளி ஆய்வு மற்றும் 06.08.2024ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் முதிர்கொசு ஒழிப்பு இயந்திரம் வாங்க அறிவுறுத்தியதன்படி இந்நகராட்சி பொது சுதாதார பிரிவிற்கு தேவையான முதிர்கொசு ஒழிப்பு இயந்திரம் (Vehicle Mounted Fogging Machine) மத்திய அரசின் Government e Market Place (GeM)ல் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.419/2024/எச்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.484, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகளில் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக, DBC பணியாளர்கள் வீடு வீடாக சென்று களப்பணி மேற்கொள்ளும் பொருட்டு களப்பணியாளர் தினசரி பணி அளவீட்டு பதிவேடுகள் 200 எண்ணங்கள் வாங்குவதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய Javah Industry நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும், விழிப்புணர்வு பொருட்கள் வாங்குவதற்கு மன்ற அனுமதி பெறப்பட்ட தொகையிலிருந்து மேற்படி பட்டியல் தொகை வழங்கவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.655/2023/எச்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.485, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

இணை இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் 02.08.2024ம் தேதிய காணொளி ஆய்வுக்கூட்டம், திருநெல்வேலி நகராட்சி நிவாக மண்டல இயக்குநர் அவர்களின் 03.08.2024ம் தேதிய காணொளி ஆய்வு மற்றும் 06.08.2024ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில்

அறிவுறுத்தியதன்படி இந்நகராட்சி பொது சுதாதார பிரிவிற்கு தேவையான தெளிப்பான் 5 எண்ணங்கள் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, குறைவான விலைப்புள்ளி வழங்கிய Sky Fog Private Limited, Chennai நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும், அதற்கான செலவினத்தொகை ரூ.48,880/-ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.421/2024/எச்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.486, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகளில் சேகரமாகும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களுக்கு அனுப்பும் பொருட்டு பிளாஸ்டிக் கழிவுகளை தினசரி பேலிங் மிசின் மூலம் கட்டு கட்டாக கட்டி உரக்கிடங்கில் சேமித்து வைக்க 2024-25ம் ஆண்டிற்கு தேவையான பேக்கிங் ரோப் மற்றும் பேக்கிங் கிளிப் வாங்குவதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய Javah Industry நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.930/2024/எச்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.487, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள 16 சமுதாய கழிப்பிடங்கள், 5 பொது கழிப்பிடங்கள் மற்றும் அலுவலக கழிப்பிடங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கும் பொருட்டு 2024-25ம் ஆண்டிற்கு தேவையான கிருமி நாசினி கருப்பு பினாயில் 600லிட்டர், லெமன் கிராஸ் ஆயில் 15 லிட்டர் மற்றும் ஆசிட் 300 லிட்டர், நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, குறைவான விலைப்புள்ளி வழங்கிய Javah Industry நிறுவனத்திடமிருந்து வாங்கியதையும், பட்டியல் தொகை ரூ.92,925/- வழங்கியதையும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.326/2024/எச்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.488, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 10.01.2023ம் தேதிய ந.க.எண்.32945/2022/EA2-SWM-21 செயல்முறை ஆணையில் சாத்தூர் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளான வீடு வீடாக குப்பை வாங்குதல், வணிக நிறுவனங்களில் குப்பைகள் சேகரித்தல் போன்ற பணிகளை தனியார் சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்ள உரிய வழிகாட்டுதலுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து இவ்வலுவலக ந.க.எண்.817/2022/H1 நாள்:05.05.2023ம் தேதிய வேலை உத்தரவின்படி, 05.05.2023 முதல் ஓராண்டிற்கு பணிகள் மேற்கொள்ள ராம்&கோ மதுரை வெளிக்கொணர்வு நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த பணிகள் 05.05.2024 முதல் முடிவடைந்த நிலையில் தேர்தல் நடத்தை காரணமாக நகர்மன்ற அனுமதி பெற முடியாத சூழ்நிலையில் 05.05.2024 முதல் 31.08.2024 வரை பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று மேற்படி ராம்&கோ நிறுவனத்திற்கு பழைய ஒப்பந்த அடிப்படையில் பணியை நீடித்து உத்தரவு வழங்கியமைக்கு நகர்மன்றத்தின் அனுமதி பெறலாம்.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.817/2022/எச்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.489, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.17</u>

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுர அடி பரப்பளவு உள்ள மனைகளில் 3500 சதுர அடி பரப்பளவான தரைத்தளம் அல்லது தரைத்தளத்துடன் கூடிய முதல் தள குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட சுய சான்றின் அடிப்படையில் இணையவழி (Single Window Portal) கட்டிட அனுமதி வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசாணை எண்.119,நாள்.16.07.2024-ன்படி ஆணையிடப் பட்டுள்ளது.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி (UD4(1)) துறை அரசாணை எண்.133 நாள்.18.07.2024ன்படி சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டு மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி (UD4(1)) துறை அரசாணை எண்.133 நாள்.18.07.2024ன்படி உள்கட்டமைப்பு அடிப்படை

வசதிகள் மற்றும் அபிவிருத்தி கட்டணங்கள் வசூலிப்பதில் விலக்கு அளித்து தமிழ்நாடு நகர்ப்புற ஒருங்கிணை கட்டிட விதிகள் 2019-ல் சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

தரைத்தளம் அல்லது தரைத்தளத்துடன் கூடிய முதல் தள இரண்டு குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட சுய சான்றின் அடிப்படையில் இணையவழி (Single Window Portal) கட்டிட அனுமதி வழங்குவதற்கும் ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து ந.நி(ம)குடிநீர் வழங்கல் (ந.நி1) துறை அரசாணை எண்.94. நாள். 18.07.2024 ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையை நடைமுறைப்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.31917/2019/டிபி2, நாள்.25.07.2024 நாளிட்ட சுற்றறிக்கை அனுப்பப் பட்டுள்ளது. இந்த சுற்றறிக்கையில் மேற்படி அரசாணையில் குறிப்பிட்டுள்ள கட்டணங்கள் (ம) வழிகாட்டுதல்களை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களில் பதிவிற்கு வைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 384/2024/எப்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.490, நாள்: 03.09.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**